Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 73

சனிக்கிழமை
07 பெப்ரவரி 2026

தை 24 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



# யாழ்ப்பாணம் வருவதில் பாதுகாப்பு அச்சுறுத்தல்!

## நிகழ்நிலைச் சாட்சியத்துக்குத் தயார்
## கோத்தாபய சத்தியக்கடதாசி

**யாழ்ப்பாணம், பெப்ரவரி 7**

**காணாமல் ஆக்கப்பட்ட லலித் மற்றும் குகன் ஆகியோர் தொடர்பான வழக்கில், யாழ்ப்பாணத்துக்கு வந்து சாட்சியம் வழங்குவதில் பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளது என்றும், ஆதலால் நிகழ்நிலை ஊடாக சாட்சியம் வழங்கத் தயார் எனவும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் கோத்தாபய ராஜபக்ச நேற்று சத்தியக்கடதாசி தாக்கல் செய்துள்ளார்.**

»11

இந்தியாவில்

## விடுதலைப்புலிகள் மீதான தடையை; நீக்கக்கோரிய மனு ஒத்திவைப்பு

சென்னை, பெப். 7
தமிழீழவிடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குமாறு, சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
இந்தியாவில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்கு விதிக்கப்பட்டிருக்கும்

»11



## காணாமல் ஆக்கப்பட்டோருக்கு விரைந்து நீதியைத் தாருங்கள்!

### யாழ். நகரில் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், பெப். 7
காணாமல் ஆக்கப்பட்ட அனைவருக்கும் நீதிகோரியும், லலித், குகன் காணாமல் ஆக்கப்பட்டமைக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபயராஜபக்ச முன்னிலையாகாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் சம உரிமை இயக்கம், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு

»11

## நீதிமன்றத்தை ஏமாற்றவே சதி செய்கிறார் கோத்தா!

### லலித்குமாரின் தந்தை குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப். 7
யாழ்ப்பாணத்துக்கு வருவதற்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளதாக கோத்தாபய ராஜபக்ச கூறியிருப்பது நீதிமன்றத்தை ஏமாற்றும் செயற்பாடே என்று காணாமல் ஆக்கப்பட்ட லலித்குமாரின் தந்தை ஆறுமுகம் வீரராஜா தெரிவித்தார். காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகோரி யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற போராட்டத்தின் பின்னர் அவர் தெரிவித்ததாவது:-
2011ஆம் ஆண்டுஎனது

»11

கட்டுப்பாட்டை இழந்து

## மோ.சைக்கிள் விபத்து மாணவன் துயரச்சாவு!

### வவுனியாவில் சோகம்



வவுனியா, பெப். 7
வவுனியா வாரிக்குட்டியூர் பகுதியில் மோட்டார் சைக்கிளொன்று கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்கு உள்ளாகியதில், அதில் பயணித்த மாணவன் ஒருவன் உயிரிழந்தான்.

»11

வவுனியாவில்

## சீர்கேடான உணவகங்களுக்கு சீல்வைத்தது சுகாதாரத்துறை!

வவுனியா, பெப். 7
வவுனியா நகர்ப் பகுதியில் பல்வேறு சுகாதாரக் குறைபாடுகளுடன் இயங்கிய ஆறு உணவகங்கள் நேற்றுச் சீல்வைத்து மூடப்பட்டன.
வவுனியா நகரில் உள்ள உணவகங்கள் நேற்று சுகாதாரப் பரிசோதகர்களால் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.
இதன்போது பல்வேறு

»11

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி

## தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட யாழ். பல்கலை ஊழியர்கள் திட்டம்





யாழ்ப்பாணம், பெப். 7
ஊழியர் பற்றாக்குறை நீக்கப்பட வேண்டும், அலுவலங்களில் உள்ள உட்கட்டமைப்புக் குறைபாடுகள் சரிசெய்யப்பட வேண்டும், மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு

»11

## கவிழ்ந்தது உழவியந்திரம்: 12 பேர் படுகாயம்

மன்னார், பெப். 7
மன்னார் - இலுப்பைக் கடவை பொலிஸ்

»11

## ஆயுதங்களுடன் நடமாடிய இருவர் புங்குடுதீவில் கைது

யாழ்ப்பாணம், பெப். 7
யாழ்ப்பாணம் - புங்குடுதீவுப் பகுதியில் கூரிய ஆயுதங்களுடன் நடமாடிய இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், புங்குடுதீவு ஒன்பதாம் வட்டாரம் வல்லன் பகுதியில்

»11

## நாள் சத்திரசிகிச்சை நிலையம் யாழில் நேற்றுத் திறந்துவைப்பு

### நோயாளர்களுக்குப் பெரும் வரப்பிரசாதம்

யாழ்ப்பாணம், பெப். 7
ஒரு நாளில் சத்திரசிகிச்சையை நிறைவுசெய்து வீட்டுக்குச் செல்லக்கூடிய வகையில், விசேட சிகிச்சைப் பிரிவொன்று யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

»11





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 06.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 4339
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 20 27 40 78
விசேட எழுத்து V

**ஹந்தஹண ராசி சுப பலன்**
திகதி 06.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 1406
வெற்றி இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 22 49 55 60


**NLB ஜய**
திகதி 06.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0365
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 4 3 6 4

**மெகா பவர்**
திகதி 06.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2445
ஆங்கில எழுத்து V
சுப்பர் இலக்கம் 11
வெற்றி இலக்கங்கள் 02 35 55 63

**மஹஜன சம்பத**
திகதி 06.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 6097
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 7 7 4 2 4 5

**தன நிதானய**
திகதி 06.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2127
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 12 36 48 53
விசேட எழுத்து D

**சுப தவசக்**
திகதி 06.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0213
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 04 10 54





# பயன்பாடற்றுப் பாழாகி வருகின்றது வன்னேரிக்குளம் சுற்றுலா மையம்

## 6 மில்லியன் ரூபா வீண்விரயம்

**யாழ்ப்பாணம், பெப்.7**

**வடக்கு மாகாணசபையின் மிகப் பெரிய நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட கிளிநொச்சி, வன்னேரிக்குளம் சுற்றுலா மையம் சிதைவடைந்து காணப்படுகின்றது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

வடமாகாண முதலமைச்சரின் அமைச்சின் குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து 6 மில்லியன் ரூபா செலவில் இந்த மையம் அமைக்கப்பட்டது.

2017ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் திகதி கரைச்சிப் பிரதேச சபையின் அழகுபடுத்தும் வேலைத்திட்டத்தின்கீழ் அப்போதைய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் திறந்துவைக்கப்பட்டது. திறந்துவைக்கப்பட்ட சில காலத்திலேயே படிப்படியாகச் சேதமடையத் தொடங்கிய இந்த மையம். இன்று முற்று முழுதாகச் செயலிழந்து காணப்படுகின்றது. கட்டடங்கள் மற்றும் உட்கட்டமைப்புகள் பற்றைகளால் சூழப்பட்டு பராமரிப்பின்றிக் காணப்படுகின்றன. சேதமடைந்துள்ள இந்தச் சுற்றுலா மையத்தை மீளப் புனரமைத்து மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவர கரைச்சிப் பிரதேசசபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-20)

**சுபிரி தன சம்பத**
திகதி 06.02.2026
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 0805
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கம் 6 2 0 0 6 3

**Super Ball** DLB
திகதி 06.02.2026
தினம் வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 3071
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கம் 03 51 52 58

**சனிதா** DLB
திகதி 06.02.2026
தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கம் 41 50 56 64
வெற்றி வாரம் 5232

**SASIRI** DLB
திகதி 06.02.2026
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 0901
வெற்றி இலக்கம் 24 26 32

**லக்ன ராசி** DLB
திகதி 06.02.2026
தினம் வெள்ளிக்கிழமை
துலாம்
வெற்றி இலக்கம் 02 19 20 60
சீட்டிழுப்பு வாரம் 4783

**KAPRUKA** DLB
திகதி 06.02.2026
தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து T
சுப்பர் இலக்கம் 12
வெற்றி இலக்கம் 09 11 42 66
வெற்றி வாரம் 2247

**அத கோடிபதி** DLB
திகதி 06.02.2026
தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கம் 25 40 48 61
வெற்றி வாரம் 2897

# மத்தள வளர்ச்சி

**கொழும்பு, பெப்.7**

மத்தள ராஜபக்ச சர்வதேச விமானநிலையம் 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இது வரையிலான தனது வரலாற்றில், கடந்த 2025 ஆம் ஆண்டில் அதிகளவிலான பயணிகளைக் கையாண்டுள்ளது என்று விமானநிலையங்கள் மற்றும் விமானசேவைகள் நிறுவனம் அறிவித்துள்ளது.

2025ஆம் ஆண்டில் மொத்தம் ஒரு இலட்சத்து 40 ஆயிரத்து 614 பயணிகள் இந்த விமான நிலையத்தைப் பயன்படுத்தியுள்ளனர். இது ஒரு வருடத்தில் பதிவான மிக அதிகப்படியான எண்ணிக்கை யாகும்.

கடந்த ஆண்டில் மட்டும் 703 சர்வதேச விமானங்கள் மத்தள விமான நிலையத்தில் வெற்றிகரமாகத் தரையிறங்கியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# மாணவர்கள் உதவி நிதி; 192 கோடி ரூபா ஒதுக்கீடு

**கொழும்பு, பெப்.7**

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்காக ஜனாதிபதி நிதியத்தால் வழங்கப்படும் 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்குவதற்காக ஜனாதிபதி நிதியம் சுமார் 192 கோடி ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது. ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த நிதி ஒதுக்கீடுகள் அனைத்தும் தற்போது அந்தந்த மாவட்டச் செயலாளர்கள் ஊடாகப்பிரதேசசெயலாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## மாகந்துரே மதூஷின் மனைவி, மகன் கைது

**கொழும்பு, பெப்.7**

கொலை செய்யப்பட்ட பாதாள உலகக் கும்பல் தலைவன் மாகந்துரே மதூஷின் மனைவி மற்றும் மகன் உட்பட ஐந்து பேர் மகரகம பகுதியில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொலிஸார் ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என மகரகம பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## அனுஷ பெல்பிட்டவின் விளக்கமறியல் நீடிப்பு

**கொழும்பு, பெப்.7**

ஊடக அமைச்சின் முன்னாள் செயலாளரும், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவருமான அனுஷ பெல்பிட்டவின் விளக்கமறியல் எதிர்வரும் 20ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தினால் நேற்று இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரச நிதி மற்றும் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் நிதியைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்டதாகக் கூறப்படும் முறைகேடுகள் மற்றும் சட்டவிரோதச் செயற்பாடுகள் தொடர்பான விசாரணைகளின் அடிப்படையில் அவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ச-இ)

## நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதிய இரத்துச்சட்டத்துக்கு உயர்நீதிமன்றம் பச்சைக்கொடி!

**கொழும்பு, பெப்.7**

நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியங்களை நீக்குவதற்கான சட்டவரைவில் எந்தவொரு ஏற்பாடும் அரசியலமைப்பில் உள்ள எந்தவொரு விதிக்கும் முரணாக அமையவில்லை என உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளதாக சபாநாயகர் நேற்றுச் சபையில் அறிவித்துள்ளார்.


நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய சபாநாயகர், இந்தச் சட்டவரைவை நாடாளுமன்றத்தில் ஒரு சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றமுடியும் என உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படும் விசேட வரப்பிரசாதங்களைக் குறைக்கும் நோக்கில் தற்போதைய அரசாங்கத்தால் இந்தச் சட்டவரைவு முன்மொழியப்பட்டது.

இதற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களைப் பரிசீலித்த பின்னரே உயர்நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

இந்தத் தீர்ப்பின் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இரத்துச்செய்யும் சட்டவரைவை நிறைவேற்றுவதற்கான சட்டரீதியான தடைகள் நீங்கியுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# அக்கரைவெளியில் அறுவடையான 5,000 நெல் மூடைகள் வெள்ளத்தில்!

## விவசாயிகள் பெரும் அந்தரிப்பு

**முல்லைத்தீவு, பெப்.7**

**கொக்குத்தொடுவாய், அக்கரைவெளி விவசாய நிலங்களுக்குச் செல்லும் வீதி கடுமையாகச் சேதமடைந்திருப்பதால், அங்கு அறுவடை செய்யப்பட்ட நெல்லைக் கொண்டுசெல்லமுடியாது விவசாயிகள் திண்டாடி வருகின்றனர்.**

800 ஏக்கருக்கும் மேற்பட்ட வயல்களில் அறுவடை செய்யப்பட்ட சுமார் 5 ஆயிரம் நெல் மூடைகள் மழைக்கு மத்தியில் வீதியோரங்களிலும், வயல்வெளிகளிலும் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

அக்கரைவெளியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப்புறக்கிராமங்களான கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயி களும், திருகோணமலை மாவட்டத்தின் எல்லைப்புறக் கிராமமான தென்னமரவடிப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகளும் சுமார் 2 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட வயல்நிலங்களில் நெற்செய்கை மேற்கொண்டுள்ளனர்.

அக்கரைவெளி வயல்களுக்குச் செல்லும் வீதி மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அந்த வீதியில் உள்ள விளாத்தியடி இறக்கப் பாலமும் உடைப்பெடுத்துள்ளது. இதனால் விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை அங்கிருந்து எடுத்துச்செல்ல முடியாத நிலையிலுள்ளனர். 15 நாள்களுக்கு மேலாக நெல்மூடைகள் வயல்களில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. அண்மையில் பெய்த மழையால் நெல்மூடைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

விளாத்தியடி இறக்கப்பாலத்தைச் தற்காலிகமாகச் சீர் செய்து, அறுவடை செய்த நெல்லை எடுத்துச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரனுக்கும் அவர்கள் தெரியப்படுத்தியுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் நேரில்சென்றுநிலைமைகளை ஆராய்ந்துள்ளார். (க-246)

## கிளிநொச்சி, முல்லைத்தீவுக்கு புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர்



கிளிநொச்சி, பெப்.7

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபராக எம்.என்.எஸ். மெண்டிஸ் நேற்றுத் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுக் கொண்டார். இரணைமடுவில் அமைந்துள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் நேற்றுக் காலை பதவியேற்பு நிகழ்வுகள் இடம்பெற்றன. இதன்போது சர்வமத வழிபாடுகள் நடத்தப்பட்டு ஆசீர்வாதங்கள் பெறப்பட்டதைத் தொடர்ந்து அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். (ச-113)

## சிறைச்சாலை அதிகாரி ஹெரோய்னுடன் கைது

கொழும்பு, பெப்.7

பூஸா அதியுயர் பாதுகாப்புச் சிறைச்சாலையின் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் ஹெரோய்ன் போதைப் பொருளுடன் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ரத்கம பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரான சிறைச்சாலை அதிகாரியிடமிருந்து 7 கிராம் 180 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை ரத்கம பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

## வீட்டிலிருந்து வெடிமருந்துகள் மீட்பு

கொழும்பு, பெப்.7

கந்தானை வீதி மாவத்தைப் பகுதியில் வீடொன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த வெடிமருந்துகள் களனிப் பிரிவு குற்றப்புலனாய்வுப் பணியகத்தால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மீட்கப்பட்டுள்ளன.

டுபாயில் கைதுசெய்யப்பட்டு அண்மையில் நாட்டுக்கு அழைத்துவரப்பட்ட சந்தேகநபர் ஒருவர் பொலிஸ் தடுப்புக் காவலில் வழங்கிய தகவலுக்கமைய அவை கைப்பற்றப்பட்டுள்ளன. (ச-இ)

## 500 பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் பலகைகள்

2026ஆம் ஆண்டில் முதற்கட்டமாக நாட்டின் ஆயிரத்து 500 பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் பலகைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற அமர்வின்போது, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். ஸ்மார்ட் பலகைகளுக்காகப் பெற்றோரிடம் பணம் சேகரிக்கவேண்டாம் என ஏற்கனவே சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. பாடசாலை நிர்வாகங்கள் அத்தகைய நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தவேண்டும் என்றும் பிரதமர் வலியுறுத்தினார். (ச-இ)




## பராக்..பராக்... பராமரிப்புக்காரர் பராக்...!-2

வருத்தக்காரர் எண்டால் அதுக்கேத்தபடி உப்பு, புளி, உறைப்பு குறைவா இருக்கிற பத்தியச் சாப்பாடுதான் செய்யோனும். ஆனால் இந்தப் பராமரிப்பு வேலைக்குப் போனவை, வருத்தக்காரரைக் கணக்கில எடுக்காமல் தங்களுக்கு என்ன பிடிக்குமோ அதைத்தான் சமைப்பினம். எண்ணெய் நல்லா மிதக்க மிதக்க, உறைப்பும் உப்பும் தூக்கலாப் போட்டுத்தான் சமையல் நடக்கும். கேட்டால் நாங்க காரசாரமான ஆட்கள்" எண்டொரு வியாக்கியானம். இப் பிடிப் பராமரிப்புக்காரருக்குப் பிடிச்ச சாப்பாட்டைச் சாப்பிட்டால், வருத்தம் இன்னும் கூடுமெல்லோ. அதையெல்லாம் அவையள் யோசிக்கவே மாட்டினம்.

"வேலை பிடிக்காட்டி வேற ஆளைப் பிடியுங்கோ, நாங்கள் போறம்" எண்டு மிரட்டல் வேற. இரவு 9 மணிக்குப் பிறகு பராமரிப்புக்கு வந்தவையைக் காணக்கிடைக்காது. தனியறைக்குள்ள போய், விடிய விடிய போனில 'கடலை போட' துடங்கிடுவினம். "என்ன உங்கட ஆக்கள் இப்பிடி இரவிரவா போன் கதைச்சு எங்கட நித்திரையைக் குழப்புகினம்" எண்டு கொம்பனிக்காரனுக்கு முறைப்பாடு செய்தால், "வேலை முடிஞ்சா கதைக்கக் கூடாதோ?" எண்டு கொம்பனிக்காரரும் அவைக்கு வக்காலத்து வாங்குகினம். வேலைமுடிஞ்சால் போன் கதைக்கிறது பிழையில்லைத்தான், ஆனால் போன் கதைக்கிறதை மட்டுமே வேலையா வைச்சிருக்கிறது பிழையோ இல்லையோ?


அதைவிட அவைக்குக் கொம்பனிக்காரர் சம்பளம் குறைவாக் குடுக்கிறதால, அதை பலன்ஸ் பண்றதுக்காக பராமரிப்புக்கெண்டு போன வீடுகளில உள்ள பெறுமதியான பொருள்களிலையும் சிலர் 'கைவைச்சிருக்கினம்'. வயசானவைதானே கண்டுபிடிக்கமாட்டினம் எண்டது அவையின்ர எண்ணம். ஆனால் கிழடு கட்டையள் சி.சி.ரீ.வி.கமெரா வை விடப் பொல்லாத கண்காணிப்புக்காரர் எண்டது அவைக்குத் தெரியேலை. சிலவேளை வீட்டில உள்ள சாமான்களை இவையள் ஒளிச்சு மறைச்சுக் கொண்டுபோகேக்க கையும் மெய்யுமாப் பிடிபட்டால், 'அந்த வயதான கிழவன் என்ர கையை பிழையாப் பிடிக்குது' எண்டு பிளேட்டை மாத்துகினமாம். அதால் கண்ணுக்கு முன்னால களவு நடந்தாலும் அதைப் பார்த்துக்கொண்டிருக்கவேண்டிய கட்டாயமும், ரென்சனும் அந்த வருத்தக்கார வயதான ஆக்களுக்கு.

உண்மையில பாவம் ஆரெண்டால், இவையை வேலைக்குப் பிடிச்ச அந்த வெளிநாட்டுப் பிள்ளையள் தான். சீ.சி.ரி.வி. கமராவில வீட்டைப்பார்த்துட்டு எல்லாம் நல்லா நடக்குது எண்டு நினைக்கினம். ஆனால் இஞ்ச நடக்கிறதோ அதுக்கு எதிர்மாறு. கடைசிக்காலத்தில நிம்மதியா ஒரு நேரக் கஞ்சியாவது குடிச்சுட்டுப் படுக்கலாம் எண்டு நினைக்கிற வயசான ஆக்களின்ர தலையெழுத்து, இப்பிடியான காசுகறக்கிற கொம்பனியளிட்டையும், அவையின்ர வேலையாக்களிட்டையும் சிக்கிச் சீரழியுது. உரியவை இந்த 'பராமரிப்புப் பகல் கொள்ளையரைக்' கொஞ்சம் கவனிக்க மாட்டினமோ?

padsi@uthayan.com
- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் மணல் கடத்திய முன்னாள் பொலிஸின் டிப்பர்!



## கலைத்துச் சென்று பிடித்த பொலிஸார்

யாழ்ப்பாணம், பெப்.7

**வடமராட்சிப் பகுதியில் சட்டவிரோத மணல் கடத்தலில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவந்த டிப்பர் பொலிஸாரால் கைப் பற்றப்பட்டு அதன் சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.**

பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கற்கோவளம் பகுதியில் மணல் அகழ்ந்து கடத்தப்படுவதாக காங்கேசன்துறை குற்றத்தடுப்புப் பொலிஸாருக்கு நேற்றுமுன்தினம் கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டனர். அப்போது மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனத்தை நிறுத்துமாறு பொலிஸார் கட்டளையிட்டுள்ளனர். எனினும், பொலிஸாரின் கட்டளையை மீறிச் சாரதி வாகனத்தைச் செலுத்திச் சென்றுள்ளார். அதையடுத்துப் பொலிஸார் அந்த வாகனத்தைத் துரத்திச் சென்று, வல்லிபுரம் பகுதியில் வைத்து மடக்கிப்பிடித்தனர். கைப்பற்றப்பட்ட டிப்பர் வாகனம், முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்குச் சொந்தமானது எனத் தெரியவந்துள்ளது. மணல் கடத்தலில் ஈடுபட்ட சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவருடன் டிப்பர் வாகனம் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச-100,27)

## மெய்வல்லுநர் போட்டி

கொடிகாமம், பெப்.7

கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி பாடசாலை மைதானத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. பிரதி அதிபர் கு.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.ஜெகதாசனும், சிறப்பு விருந்தி னராக சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் ந.ஜெயரூபனும், கௌரவ விருந்தினர்களாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி றஜனி புவிகரன் கோப்பாய் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுதர்ஜினி சாந்தகுமார் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-41-159)



## அ.பஞ்சலிங்கம் நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், பெப்.7

கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் அதிபரும் உரும்பிராய் கிட்ஸ் பார்க், திருநெல்வேலி சிமாட் கிட்ஸ் ஆகிய முன்பள்ளிகளின் தலைவரும் நிறுவுநருமான அமரர் அப்பாத்துரை பஞ்சலிங்கத்தின் நினைவஞ்சலிக்கூட்டம் இன்று சனிக்கிழமை உரும்பிராய் கிட்ஸ் பார்க் மண்டபத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. உரும்பிராய் கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச)

## மகா சிவராத்திரியையொட்டி கேதீச்சரத்துக்கு யாத்திரை!

யாழ்ப்பாணம், பெப்.7

சிவனுக்குரிய விரதங்களில் ஒன்றான மகா சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் மாதோட்டம் திருக்கேதீச்சரம் ஆலயம் நோக்கிய சிவலிங்கப் பெருமானுடன் கூடிய அலங்கரிக்கப்பட்ட ஊர்தியைத் தாங்கிய சிவனடியார்களின் பாதயாத்திரை எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8 மணியளவில் தொண்டைமானாறு ஸ்ரீசெல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

மகா சிவராத்திரி நன்னாளான எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பாதயாத்திரைக் குழுவினர் திருக்கேதீச்சரம் ஆலயத்தைச் சென்றடைந்து வழிபாடுகளிலும் ஈடுபடுவர். சிவராத்திரிக்கான பாதயாத்திரையில் ஆர்வமுள்ள அனைவரும் இணைந்துகொள்ளமுடியுமெனப் பாதயாத்திரையின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உலக சைவத் திருச்சபை, திருக்கேதீச்சரம் திருத்தலப் பாதயாத்திரிகர்கள் சேவா சங்கம் ஆகியன இணைந்து இந்த யாத்திரையை முன்னெடுக்கின்றன. (ச-66)

## சிறந்த வருடாந்த அறிக்கை; மன்னார் மூன்றாம் இடம்

மன்னார், பெப்.7

2025ஆம் ஆண்டுக்கான சிறந்த வருடாந்த அறிக்கை மற்றும் கணக்கறிக்கைக்காக, மன்னார் மாவட்டச் செயலகம் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இலங்கை பொதுநிதிக் கணக்காளர்கள் சங்கம் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பொதுத்துறைப்பிரிவு இணைந்து ஏற்பாடு செய்த விருது வழங்கல் நிகழ்வு, சிறிமாவோ பண்டாரநாயக்கா கண்காட்சி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

2017ஆம் ஆண்டு முதல் நடைபெற்றுவரும் இந்த விருது வழங்கல் நிகழ்வு, ஆரம்பத்தில் மாகாண மட்டங்களுக்கிடையே நடைபெற்று வந்தது.

இம்முறை மாவட்டங்களும் உள்வாங்கப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் மன்னார் மாவட்டச் செயலகம் முதன்முதலாகப் பங்குபற்றி, மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது. (க-60)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன்வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** பலவகைகளிலும் அனுகூலமான நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். செரிமானப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரவகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். தாய்வழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். புதிய நண்பர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவ னம் தேவை. மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப் பிடிக்கவும்.

**கன்னி:** சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. மாலையில் குடும்பப் பெரியவர்களுடன் கலந்துபேசி முக்கியமான முடிவு எடுப்பீர்கள்.

**துலாம்:** முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணைவழி உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு இருப்பதுடன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பம் தொடர்பான பிரச்சினை ஒன்றில் வாழ்க்கைத்துணை உங்களுடைய ஆலோசனையைக் கேட்டுவருவார்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்** எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபடவேண்டி இருக்கும்

**மீனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது. வாழ்க்கைத் துணையின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# மயிலத்தனைமடு மாடுகளும் பாகிஸ்தானியக் காளைகளும்!

பால் உற்பத்தியில் தன்னிறைவு அடைவதற்காக, பாகிஸ்தானில் இருந்து உயர்தரக் 'காளைகள்' இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. இலங்கையின் உள்ளூர்ப் பசுக்களுக்கு பாகிஸ்தானியக் காளைகளை வைத்து சினைப்படுத்தலை மேற்கொண்டு, இலங்கையில் உள்ள பசுக்களின் தரத்தை உயர்த்துவதும், பாலுற்பத்தியை அதிகரிப்பதுமே இந்தத் திட்டத்தின் பிரதான நோக்கம். வெளிநாடுகளில் இருந்து கறவைப் பசுக்களை இறக்குமதி செய்தால், அவற்றின் ஆயுட்காலம் நிறைவடைந்ததும் மீண்டும் மீண்டும் அவற்றை இறக்குமதி செய்யவேண்டிய அவசியம் ஏற்படும். அத்துடன், வெளிநாட்டுத் தட்ப வெப்பங்களுக்குப் பழக்கப்பட்ட கறவைப் பசுக்களை இலங்கையில் பராமரிப்பதானது செலவீனங்களையும் அதிகரிக்கும். ஆதலால், உயர்ந்த இனக் காளைகளைப் பயன்படுத்தி, இலங்கையின் உள்ளூர்ப் பசுக்களின் தரத்தை உயர்த்தும் திட்டம் வரவேற் கப்படவேண்டியதே.

ஆனால், பாலுற்பத்தியில் தன்னிறைவு அடைவதற்கு, இலங்கையில் உள்ள அனைத்து வளங்களையும் இலங்கை அரசாங்கம் சரிவரப் பயன்படுத்தியதா? என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாக அமைகின்றது. பால் இறக்குமதிக்காக வெளிச்செல்லும் பணத்தைக் கட்டுப்படுத்த வியூகம் வகுத்த அரசாங்கம், மயிலத்தனைமடுவில் பலநூறு ஏக்கர் மேய்ச்சல் தரைகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஏன் கவனம் செலுத்தவில்லை? பசுக்களுக்கு நல்ல தீவனம் கிடைத்தால்தான் பாலுற்பத்தி மேம்படும். இதுவே அடிப்படை. எனவே, எமது பசுக்கள் மேய்ந்து திரியும் இடங்கள் சிங்கள பேரினவாதத்தின் பிடியில் உள்ளன. பசுக்களுக்குப் போதிய உணவில்லாமல் பண்ணையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே, துறைசார் விடயத்தில் கண்ணெதிரே பெரும் அநீதியும், தவறும் இருக்கையில், அதைச் சரிசெய்யாமல் அடுத்த கட்டத்துக்கு நகர்வதால் எந்தப் பயனும் இல்லை.

எனவே, வெளிநாடுகளில் இருந்து பசுக்களையும், காளைகளையும் கொண்டுவந்து பாலுற்பத்தியை மேம்படுத்துவது ஒருபுறம் இருக்கட்டும். பாலுற்பத்தியை வாழ்வாதாரமாகக் கொண்டு, தமக்கு நீதிகோரி போராடிக் களைத்துவிட்ட பண்ணையாளர்களுக்கு நியாயம் செய்வதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும். ஏனெனில், 'ஆக்கிரமிப்பு மனோபாவத்தால்' உள்நாட்டுப் பாலுற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கும் சமநேரத்தில், அரசாங்கம் இவ்வாறான அபிவிருத்திகளை மேற்கொள்வது அறம் அற்றதாக அமைந்துவிடும். எல்லாவற்றையும்விட, பாலுற்பத்தியைப் போன்று இலகுவாக தன்னிறைவு காணக்கூடிய ஏராளமான விடயங்கள் இலங்கையில் உள்ளன. அள்ளஅள்ளக் குறையாத மீன்கள் உள்ளன. ஆனால், அதன் பயன்களை அடியோடு அறுவடை செய்வது அத்துமீறும் தமிழக மீனவர்களே. எனவே, மீன்பிடியிலும், ஆகச்சிறந்த சந்தை வாய்ப்புகளை அரசாங்கம் ஏற்படுத்தவேண்டும். மட்டுமல்லாமல், கோழி வளர்ப்பு, தானிய உற்பத்தி என்று நாம் தன்னிறைவு காணவேண்டிய பட்டியல் மிக நீட்சியானது. 21ஆம் நூற்றாண்டில் தன்னிறைவுப் பொருளாதாரம்தான் ஒரு நாட்டின் இருப்பை உறுதி செய்யும். அமெரிக்க வரிகள் காலக் கண்ணாடியாக இதைப் பறைசாற்றியுள்ளன. அதிலும், தீவு நாடு என்ற வகையில், தன்னிறைவுப் பொருளாதாரத்தை இறுகப்பற்ற வேண்டிய கட்டாயத்தேவை இலங்கைக்கு இருக்கவே செய்கின்றது.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

**வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்**

**பொருள்:** ஒருவன் அறம் செய்யத் தவறிய நாள் ஏற்படாதவாறு அறத்தைச் செய்வானானால் அதுவே அவன் உடலோடு வாழும் நாள் வரும் பிறவி வழியை அடைக்கும் கல்லாகும்.




# சிறுவர் யாசகர்கள் நாட்டில் அதிகரிப்பு

**கொழும்பு, பெப்.7**
**இலங்கையில் சிறுவர்களைக் கட்டாயப்படுத்தி யாசகத் தொழிலில் ஈடுபடுத்தும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துவருகின்றன என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை கவலை வெளியிட்டுள்ளது.**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையால் வெளியிடப்பட்டுள்ள தரவு அறிக்கைகளின்படி, சிறுவர்கள் யாசகம் எடுக்கக் கட்டாயப்படுத்தப்படுவது தொடர்பாகக் கடந்த ஆண்டு முதல் இதுவரை 287 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது முந்தைய ஆண்டைவிட அதிகரிப்பைக் காட்டுகின்றது.
இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள மகளிர் மற்றும் சிறுவர்கள் விவகார பிரதி அமைச்சர் நாமல் சுதர்சன, சிறுவர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளின் பற்றாக்குறை இந்த விவகாரத்தைக் கையாள்வதில் பெரும் சவாலாக இருக்கின்றது. இதைத் தடுப்பதற்கான விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் விரைவில் தீவிரப்படுத்தப்படும் என்றார். (ச-இ)



## மாணவர்கள் குழு மோதல்: 7 பேர் சிகிச்சையில்

இரு பாடசாலை மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் காயமடைந்த 7 மாணவர்கள் களுத்துறை போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பேருவளை கல்வி வலயத்துக்குட்பட்ட இரு பாடசாலை மாணவர்களே மோதலில் ஈடுபட்டுள்ளனர்.
க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பாடசாலை மாணவர்களுக்காக இடம்பெற்ற விசேட வகுப்பில் கலந்துகொண்ட இரண்டு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர் குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட தகராறே மோதலாக மாறியுள்ளது. (எ-இ)

## 62,352 ஆமைக்குஞ்சுகள் கடலில் விடுவிப்பு

கொழும்பு, பெப்.7
ஆமைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், 2025 ஆம் ஆண்டில் மாத்திரம் 62 ஆயிரத்து 352 ஆமைக் குஞ்சுகள் இலங்கை கடலோரப் பொலிஸாரால் கடலில் விடப்பட்டுள்ளன. நாடு முழுவதும் தெரிவுசெய்யப்பட்ட 14 கடற்கரைப் பகுதிகளிலிருந்து இந்த ஆமைக்குஞ்சுகள் விடுவிக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் மூலம் சுமார் 5 வகையான கடலாமை இனங்கள் பாதுகாக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## விபத்தில் தந்தை மகன் உயிரிழப்பு

அக்மீமன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனாகமுவ பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற வீதி விபத்தில் தந்தையும் மகனும் உயிரிழந்துள்ளனர். காலி நோக்கிப் பயணித்த கார் ஒன்று எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து நடந்துள்ளது.
மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களே உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்கள் 36 மற்றும் 16 வயதுடையவர்கள் எனத் தெரியவந்துள்ளது. (ச-இ)



# ஆசியாவின் சிறந்த மலைப்பகுதி நுவரெலியாவுக்கு இரண்டாமிடம்

ஆசியாவில் சிறந்த மலைப்பிரதேசங்களின் பட்டியலில் இலங்கையின் நுவரெலியா இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது. பிரபல சுற்றுலா இணையத்தளமான அகோடா இந்தத் தரவரிசையை வெளியிட்டுள்ளது.
இலங்கையின் மலையகப் பகுதியில் அமைந்துள்ள நுவரெலியா, 'குட்டி இங்கிலாந்து' என்று அழைக்கப்படுகிறது. அகோடா நிறுவனம் நுவரெலியாவைத் தெரிவுசெய்வதற்கு கண்ணுக்கெட்டிய தூரம்வரை பரந்துவிரிந்து கிடக்கும் பசுமையான தேயிலைத் தோட்டங்கள், பிரித்தானியர் கால கட்டடங்கள், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் குளிர்ச்சியான மற்றும் இதமான வானிலை என்பன பிரதான காரணிகளாக அமைகின்றன. (ச-இ)

நாளை
ஞாயிற்றுக்கிழமை - தை 25
08.02.2026
சுபநேரம் : 09.35 - 11.05
ராகுகாலம் : 05.05- 06.35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்வி அறிவித்தல்
## யாழ் மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம்
## 95, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

1. எமது சமாசத்தின் நிதி ஒதுக்கீட்டில் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் உள்ளவாறான வேலைத்திட்டத்தினை மேற்கொள்ளவுள்ளது.
2. யாழ் மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடம் இருந்து கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைக்காக கோருகின்றது.
3. தேசிய போட்டி கேள்விகோரல் நடமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
4. கேள்விபெற தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Blacklist) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமானதரத்தில் வீதிமற்றும் கட்டுமான, அமைப்புக்கான CIDA பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
5. தேவையானதகமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிகதகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர் யாழ் மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம் தொலைபேசி : 0212222639 Email : jdcrbu@gmail.com இல் இருந்து மேலதிக தகவலை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் அலுவலக வேலை நாட்களில் 09-02-2026 ஆம் திகதியிலிருந்து 23-02-2026 ஆம் திகதி வரை மு.ப 09.00 முதல் பி.ப 3.00 மணிவரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணமொன்றை பெறுகைக்குழு யாழ் மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம்அவர்களிடம் இருந்து 09-02-2026 ஆம் திகதியிலிருந்து23-02-2026 ஆம் திகதி வரை மு.ப 09.00 முதல் பி.ப 3.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 5000.00 (Vate நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாக செலுத்தப்பட வேண்டும்.
8. கேள்வி இருபிரதிகளில் தயாரித்து **"தலைவர்,பெறுகைக்குழு யாழ் மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம்" இல.95, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 24-02-2026 ஆம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்க கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும்.கேள்வி நேரம் முடிந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லதுஅவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| Co-op /2026/02 | Construction of Shopping Complex – Upper Floor | 12million | 150Days | 80,000.00 | 90 Days |

10. கேள்வி கோரல் பற்றிய முன்னோடிக் கூட்டம் 19.02.2026 ஆம் திகதி 14.30 மணிக்கு யாழ் மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசத்தின் மண்டபத்தில் இடம்பெறும். ஆர்வமுள்ளகேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ள முடியும்.

தலைவர்,
பெறுகைக்குழு யாழ் மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம்.

(CR/47031) J-1

## வேலையாட்கள் தேவை

கொழும்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், பருத்தித்துறை மற்றும் வவுனியா நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

- முகாமையாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துனர்
- காசாளர்

(உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.)
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**தொடர்பு:077 386 6250**

(CS 31165) A

## பெயர் மாற்றம்

சோதி வேம்படி மானிப்பாயில் வசிக்கும் **இராசு** ஆகிய நான் எனது பெயரை **இராசமணி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **இராசமணி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**இராசமணி**

(CS 31160)A

## மணமகள் தேவை

யாழ். இந்து (V), 1998, மூலநட்சத்திரம் 4ம் பாதம், துபாய்யில் மோட்டார் மெக்கானிக் வேலை பார்க்கும் மணமகனுக்கு பொருத்தமான மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு:-
**075 768 7180**

(CS60671C) J-1

## KIDS PLAY ASSISTANT

மருதனார்மடத்தில் அமைந்துள்ள சிறுவர் உள்ளக விளையாட்டு பூங்காவில் வார இறுதி மற்றும் விடுமுறை நாட்களில் பகுதி நேர வேலை வாய்ப்பு உண்டு.
மருதனார்மடம், உடுவில், இணுவில், சுன்னாகம் பகுதிகளில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
முன்பள்ளி ஆசிரியர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு: 076 4472 379**

(CS 31167)A

உ
ஸ்ரீராம ஜெயம்

## விவாஹ சோபன சுபமுகூர்த்தப் பத்திரிகை

மஹா ராஜராஜ ஸ்ரீ ......................................................................................அவர்களுக்கு

அநேக நமஸ்காரம் / உபயகுசலோபரி

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான விசுவாவசு ஹூ தை மீ 25ம் நாள் (08.02.2026) ஞாயிற்றுக்கிழமை ஸப்தமி திதியும் சுவாதி நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய காலை 08.43 முதல் 10.22 மணிவரையுள்ள மீன லக்ன சுபமுகூர்த்த வேளையில்

கோவையாதீனம் நயினைக்குருமணி பாரத்வாஜ கோத்திரம்
**சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக்குருக்கள் இராஜேஸ்வரியம்மா** தம்பதியின் பௌத்திரியும்
நகுலேஸ்வரம்
**இராமசந்திரகுருக்கள் சரோஜினியம்மா** தம்பதியின் தௌஹித்திரியும்
**சண்முகராஜக்குருக்கள் நகுலாம்பிகைஅம்மா** தம்பதியின்
ஏக குமாரியுமான
**சௌபாக்கியவதி ராஜதுளசி**
என்கின்ற வதுவை



கீரிமலை நகுலேஸ்வர ஆதீனம் பாரத்வாஜ கோத்திரம்
**சிவஸ்ரீ தி. கார்த்திகேயக்குருக்கள் சாரதாம்பாள்** தம்பதியின் பௌத்திரனும்
மாவை ஆதீனம்
**துரைச்சாமிக்குருக்கள் விசாலாக்ஷியம்மா** தம்பதியின் தௌஹித்திரனும்
**துரைச்சாமிக்குருக்கள் அகிலாண்டேஸ்வரிஅம்மா** தம்பதியின்
கனிஷ்ட குமாரனுமான
**சிரஞ்ஜீவி திவாகரசர்மா**
என்கின்ற வரனுக்கு

கன்னிகாதான திருமாங்கல்யதாரண பாணிக்கிரஹணம் செய்து வைப்பதாக குலதெய்வங்களுடைய திருவருளும் காஞ்சி காமகோடி பெரியவரின் குருவருளும் துணைகொண்டு பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட மேற்படி சுபமுகூர்த்தம் திருவருள்மிகு பலானை கண்ணகை அம்மன் தேவஸ்தானத்தில் (கோப்பாய்) நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் பந்துமித்திர குடும்ப ஸமேதராய் வருகைதந்து மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதித்து விருந்துபசாரத்தில் கலந்து சபையை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| சமாவர்த்தனம் | : **07.02.2026 சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் மணமகன் இல்லத்தில் நடைபெறும்.** |
| மணமகன் இல்ல வரவேற்பு உபசாரம் | : **08.02.2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு நடைபெறும்.** |
| மணமகள் இல்ல வரவேற்பு உபசாரம் | : **11.02.2026 புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.** |

**இவ்வண்ணம் தங்கள் நல்வரவை இனிதே நாடும்**

சிவஸ்ரீ. ப. சண்முகராஜக்குருக்கள் நகுலாம்பிகை தம்பதியினர்
சிவஸ்ரீ. ச. கௌரிசங்கரக்குருக்கள் தேனுகா தம்பதியினர்
பிரம்மஸ்ரீ ச. இராஜசங்கரசர்மா
பிரம்மஸ்ரீ ச. சங்கரசுதசர்மா
G. ஸ்ரீமஹதி, G. ஸ்ரீதீக்ஷித், G. ஸ்ரீஸாக்ஷித்
"அம்பிகை வாசா"
கண்ணகை அம்மன் கோவிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.
076 621 9793, 077 5164185

சிவஸ்ரீ கா. துரைச்சாமிக்குருக்கள் அகிலாண்டேஸ்வரி தம்பதியினர்
பிரம்மஸ்ரீ சு. பாலகிருஷ்ணசர்மா பத்மாவதி குடும்பத்தினர்
சிவஸ்ரீ. து. சுப்ரமணியக்குருக்கள் ராஜினி குடும்பத்தினர்
பிரம்மஸ்ரீ து. கிருபாகரசர்மா
"குகபவனம்"
அட்டகிரி கந்தஸ்வாமி கோவிலடி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.
021 430 7293, 077 845 8448

சுபமஸ்து

இரு வீட்டார் அழைப்பு

வைபவத்திற்கு உயிரூட்டுவது தங்களின் மகத்தான வருகை மாத்திரமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறை விற்பனைக்கு**
இல 424/3 K.K.S வீதி, யாழ்ப்பாணம். (வெள்ளிவிலாஸ் ஒடை),
9x8 அடி அகலம் உடைய அறை. தனி உறுதி, மின்சாரம்,
கிணற்றுப்பங்குடன் அறை விற்பனைக்கு உண்டு.
நகைத்தொழில் புரிவோருக்கு உகந்தது. விலை - 28 இலட்சம்
N. விக்னேஸ்: 077 675 1649
(CS/60669) J-1

**தவறவிடப்பட்டுள்ளது**
06.02.2026 வெள்ளிக்கிழமை ஆடியபாதம் வீதி, திருநெல்வேலிக்கு அண்மையாக கார் திறப்பு (Key) ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:- 071 415 1718
(CR/47030) J-1

**காணி உடனடி விற்பனைக்கு**
யாழ். அரியாலையில் 24 பரப்பு குடியிருப்புக் காணி உடனடி விற்பனைக்கு. 3 அறை வீடு, 2 கிணறுகள், 40 தென்னை மரங்கள் கொண்டது. A-9 கண்டி வீதி 200 மீ தூரத்தில். யாழ். நகர் 15 நிமிடம்.
விபரங்களுக்கு:
074 300 7992
WhatsApp +44 7414 942508

# 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை

(திக்கரை, களபூமி, காரைநகர்)

திதி : 07.02.2026

**தோற்றம்**
01.11.1939

**மறைவு**
15.01.2001



இருபத்தைந்து ஆண்டுகள் கடந்தாலும்
நீங்கள் போன நாள் மட்டும்
இன்றுதான் நடந்தது போல்
மனசுக்குள் இன்னும் உயிருடன்
அப்பா .......

வார்த்தைகளில் சொல்லாத அன்பும்,
பார்வையில் காட்டிய பாதுகாப்பும்,
கடுமையான மௌனத்திற்குள்
ஒளிந்திருந்த தந்தை மனமும்
இன்றும் எங்களை வழி நடத்துகிறது

வியர்வையில் வளர்ந்த வாழ்க்கை,
எங்களுக்கான கனவுகளாய் மாறி,
எங்கள் ஆசைகள் நிழலாகி
எங்கள் பாதையில் ஒளி வீசுகின்றன.

உடலால் தொலைந்தாலும்
உங்கள் வழிகாட்டல் தொலைவதில்லை
பெயர் சொல்லும் ஒவ்வொரு முறையும்
மரியாதை குரலாகவே ஒலிக்கிறது.

இருபத்தைந்து ஆண்டுகள் ஆனாலும்,
"அப்பா" என்ற சொல்லில் இன்னும்
குழந்தையாய் நிற்கிறோம்
உங்கள் நினைவில் நிம்மதி தேடி ....

நீங்கள் இல்லை என்ற உண்மை
கசப்பாக இருந்தாலும்,
நீங்கள் வாழ்ந்த விதம்
எங்கள் வாழ்க்கைக்கு பெருமையாக உள்ளது.

நினைவுகள் என்றும் மறையாது
அப்பா ....
நீங்கள் எங்கள் இதயத்தில்
என்றென்றும் வாழ்கிறீர்கள் ..

சொந்தங்களில் சண்டை வந்தால்
சத்தம் உயராத இடம்
அப்பா இருந்த வாசல் தான் ....

கோபத்தை வார்த்தையாக்காமல்,
வார்த்தைகளை மருந்தாக்கி,
பிளந்த மனங்களை
ஒற்றுமையாக இணைத்தவர் நீங்களே,
அப்பா ....

ஒரு பக்கம் நியாயம்,
மறுபக்கம் கருணை,
இரண்டுக்கும் நடுவில்
நின்ற சமநிலை உங்கள் குணம்.

பெரியவருக்கு மரியாதை,
சிறியவர்க்கு அன்பு,
யாரும் தோற்காத தீர்வை
தேடி கண்ட தந்தை மனம்.

"உறவு உடையக் கூடாது"
என்ற ஒரே கோட்பாடு தான்
உங்கள் எல்லா தீர்ப்புகளின்
அடிப்படை சட்டம்.

சமூகத்தின் சுமைகளையும்
சொந்தங்களின் கண்ணீரையும்
ஒரே தோளில் சுமந்து
அமைதி தரும் மனிதர் நீங்களே,

இன்று நீங்கள் இல்லை என்றாலும்
சண்டை வரும் இடங்களில்
"அப்பா இருந்திருந்தால்....."
என்ற வாக்கியம் தான் தீர்ப்பாகிறது.

உடல் மறைந்தாலும்
உங்கள் சமரசம் பேசும் குரல்
இன்னும் உறவுகளுக்குள்
ஒலித்துக் கொண்டே இருக்கிறது அப்பா...

**உங்கள் நினைவுடன்**
**குடும்பத்தினர்**

திக்கரை, களபூமி, காரைநகர்

(CS/60650) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக
மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 85 ரூபாய்.
நிலம் இழுத்து பதிக்க - 110 ரூபாய்
(CR/60230 J-1)

**077 334 1281**

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்நகர், கொக்குவில், தாவடி, இணுவில்
ஆகிய பகுதிகளில் 4 பேர் கொண்ட சிறு
குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை.
தரகர் தேவையில்லை.
(CS/60666) J-1

தொடர்புகளுக்கு:
**077 505 8561, 076 204 0418**


## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### நாகரத்தினம் இராசையா

(ஓய்வுபெற்ற
விவசாயப் போதனாசிரியர்)



பத்தாண்டு சென்றாலும்
பாசமுகம் மறக்கவில்லை
பக்குவமாய் பாசமுடன்
எம்மைப் பார்த்தீர்களே
பக்தியாய் வாழ்ந்தீர்கள்
பாசமுடன் அழைத்தாரோ விநாயகர்
உங்கள் ஆத்துமா சாந்திபெற
பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

பழம் வீதி,
யாழ்ப்பாணம்.

(CS 31154) A

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
22 . 10 . 1942



மறைவு
19 . 01 . 2025

### அமரர் பொன்னையா தர்மலிங்கம்

(ஓய்வுபெற்ற இ.போ.ச பேருந்து நடத்துனர்)

திதி: 07.02.2026

அன்பின் திருவுருவே பாசத்தின் உறைவிடமே
எம் வாழ்வுக்கு ஒளியூட்டிய வட்டநிலவே
ஏணியாக நின்று எம்மை ஏற்றி விட்டவரே......
தோணியாக நின்று துறைமுகம் காட்டியவரே.....
வாழ்வுக்கு இலக்கணமாய் வாழ்ந்து காட்டிய - அப்பா
இன்னும் சில காலம் எங்களோடு
வாழ மறந்ததேன் அப்பா?
எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்த
எங்கள் அன்புத்தெய்வம்
அணைந்து ஆண்டு ஒன்று உருண்டோட
எங்கள் மனம் அப்பாவை தேடி நிற்கிறது
துவண்டு நிற்கின்றோம்.


கோயில் குடியிருப்பு
கைலாயபிள்ளையார் வீதி,
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS/60654) J-1

## நினைவஞ்சலிக் கூட்டம்

கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் அதிபரும் உரும்பிராய் கிட்ஸ் பார்க், திருநெல்வேலி சிமாட் கிட்ஸ் ஆகிய மாதிரி முன்பள்ளிகளின் தலைவரும் நிறுவுனரும், கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம், நம்பிக்கை நிதியம் ஆகியவற்றின் முன்னாள் தலைவருமான



அமரர்
### அப்பாத்துரை பஞ்சலிங்கம்

தோற்றம் : 08.01.1936 மறைவு : 28.12.2025

அவர்களின்
நினைவஞ்சலி கூட்டம்
நடைபெறவுள்ளது.

காலம்: 08.02.2026 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.00 மணி
இடம் :- கொக்குவில் இந்துக் கல்லூரி
பஞ்சலிங்கம் கேட்போர் கூடம்.

பணியை வெறும் கடமையாக அல்லாமல் ஒரு சமூகப் பொறுப்பாக கருதி ஒவ்வொரு செயலையும் நியாயம், ஒழுங்கு, நேர முகாமை, மனிதநேய உணர்வுடன் ஒன்பது தசாப்தங்கள் ஒளிர்விட்டுப் பிரகாசித்து அதன் வழி எங்களை வழி நடாத்தி சிறந்த தலைமுறைகளை உருவாக்கிய எங்களின் அதிபரை நினைவுகூர் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம்

(CS/31150) J-1

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்

### துணைவி வீதி,இல 121/3, வட்டாரம் -07

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 07. துணைவி வீதியிலுள்ள: 121/3 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை கதிரேசு நடராசாவும் பெண் குணபூசணமும் ஆகியவர்கள் குறித்த ஆதனத்திற்கு தங்களில் 02ம் பேரின் தாய் தந்தையாராகிய அப்புத்துரை நடராசாவும் பெண் ஞானாம்பிகையும் ஆகியவர்கள் சொந்தக்காரர்களாக இருந்தார்கள் என்றும், குறித்த ஆதனம் அவர்களது கொள்வனவு ஆதனம் என்றும், குறித்த ஆதனம் சம்பந்தமான ஆவணங்கள் அக்கால நிலவரங்களால் அற்றுப்போய் விட்டன என்றும், குறித்த அப்புத்துரை நடராசாவும் பெண் ஞானாம்பிகையும் ஆகியவர்கள் காலஞ்செல்ல குறித்த ஆதனம் அப்புத்துரை நடராசா மகள் மாலினி ஆகியவருக்கு முதுச ஆதனமாக வந்தடைந்திருந்தது என்றும், குறித்த அப்புத்துரை நடராசா மகள் மாலினி ஆகியவர் குறித்த ஆதனத்தை தங்களில் இரண்டாம் பெயருக்கு வாய்சொல்மூலம் நன்கொடையாக அளித்திருந்தார்கள் என்றும், அதன்படி 1984ம் ஆண்டிலிருந்து குறித்த ஆதனம் தங்களின் பிரசித்தமான ஆட்சியிலேயே உள்ளது என்றும். ஆதலால் குறித்த ஆதனம் தமது சொந்த ஆதனம் எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு த.மு கதிர்காமநாதன் முகதாவில் 4364/28.09. 2002ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள்.

ஆசைப்பிள்ளை நாகேந்திரம் கைம்பெண் திருச்செல்வி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4599/20.01.2003ஆம் இலக்க உறுதியால் கதிரேசு நடராசாவும் பெண் குணபூசணமும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

ஆனந்தன் பாஸ்கரன் பெண் கலைச்செல்வி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு பரமநாதன் திலக்ஷனா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2627/12.10.2024ம் இலக்க உறுதியால் குறித்த ஆசைப்பிள்ளை நாகேந்திரம் கைம்பெண் திருச்செல்வி ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தில் ஒரு பகுதியினை சீதனமாக பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர்: "பளாக்கை அல்லது பிளாக்கை"
இறை: வட்டுக்கோட்டை மேற்கு தற்பொழுது சங்கரத்தை
வீஸ்தீரணம்: நில.பர 1 குளி 9.6
எல்லைகள்: கிழக்கு - கொட்டுடை முருகன் கோவில் ஆதனமும், சங்கரப்பிள்ளை தட்சணாமூர்த்தியினாதனமும் வடக்கு - உத்தரவு பெற்ற நில அளவையாளர் V.தவராஜா அவர்களால் 05.04.2024ம் திகதியில் வழங்கப்பட்ட 5798ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 3 என சுட்டப்பட்ட குளி 2.9 விஸ்தீரணமுடைய பாதை நிலம் மேற்கு - குறித்த படத்தில் துண்டு 1 என சுட்டப்பட்ட மிகுதியாதனம், தெற்கு - கொட்டுடை முருகன் கோவில் ஆதனம்.

குறித்த ஆனந்தன் பாஸ்கரன் பெண் கலைச்செல்வி ஆகியவர் ஆதனப்பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராத விடத்து குறித்த ஆதனமானது ஆனந்தன் பாஸ்கரன் பெண் கலைச்செல்வி ஆகியவருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனத்தின் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தவிசாளர் / செயலாளர்
வலிகாமம் மேற்குபிரதேசசபை

(CS 60662)A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல் கொள்வனவுக்குத் தயார் களஞ்சியசாலைகள் திறப்பு!

## பிரதி அமைச்சர் அரவிந்த தெரிவிப்பு

கொழும்பு, பெப்.7

**நாட்டின் பல மாவட்டங்களில் நெல் கொள்வனவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப் பட்டுள்ளன என்று காணி மற்றும் நீர்ப்பாசனப் பிரதி அமைச்சர் அரவிந்த செனரத் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.**

தற்போது பல மாவட்டங்களில் நெல் களஞ்சியசாலைகள் திறக்கப்பட்டுள் ளன. அறுவடை கிடைக்கப்பெறும் அளவைக் கண்காணித்து அடுத்தகட்ட கொள்வ னவு நடவடிக்கைகள் முறையாகத் திட்ட மிடப்பட்டுள்ளன. கையிருப்பில் உள்ள நெல்லை முறை யாக அரிசியாக மாற்றி சந்தைக்கு விடு விக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக் கப்பட்டுள்ளன. இதன்மூலம் சந்தை யில் அரிசி விநியோகத்தைச் சீரா கப்பேண முடியும். விவசாயிகளின் உற்பத்திக்கு உரிய விலையை உறுதிப் படுத்துவதற்கும், நுகர்வோருக் குத் தட் டுப்பாடின்றி அரிசியை வழங்குவதற் கும் இந்த வேலைத்திட்டம் உதவும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)



## நாவற்குழியில் வயல்விழா

மாகாண விவசாயத்திணைக்களத்தின் வயல்விழா, நாவற்குழி கிழக்கு காளிகோவிலடியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது. நிகழ்வில் நெற்செய்கையாளர் தங்கவேலுவின் வய லில் அறிமுகப்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட எல்.டி 368 சிவப்புச் சம்பா விதை நெல் அறுவடை செய்யப்பட்டது. நிகழ் வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண விவசாயப்பணிப் பாளர் திருமதி சு.செந்தில் குமரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட பிரதி விவசாயப்பணிப்பாளர் திருமதி அ.சிறிரங் கன், விதை ஆய்வுகூட பிரதி விவசாயப்பணிப்பாளர் எஸ். செல்வகுமார், விதைகள், நடுகைப்பொருள்கள் பிரதி விவசா யப் பணிப்பாளர் ஆர்.சஞ்சீவன், விவசாயிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-159)

# தொழில்முனைபவர்களை அரசு பாதுகாக்கவேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.7

நாட்டில் நிலவும் பொருளாதாரச் சூழலில் நலிவடைந்துள்ள நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களைப் பாதுகாக்க அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள் ளார். 2022ஆம் ஆண்டு புள்ளிவிவரங்களின்படி 263,000 தொழில்முயற்சிகள் மூடப்பட்டுள்ளதுடன் சுமார் 150,000 முயற் சிகள் வங்குரோத்தடைந்துள்ளன. பராட்டே சட்ட அமுலாக்கத் தில் தற்காலிக சலுகை கிடைத்தாலும், இடைப்பட்ட காலத்தில் இவர்களின் கடன்கள் மறுசீரமைக்கப்ப டவில்லை. வங்கிக் கட்டமைப்பு ஈட்டி யுள்ள மிகை இலாபத்தின் ஒரு பகுதியை கஷ்டப்படும் தொழில்முனைவோருக்குப் பகிர்ந்தளித்து அவர்களைப் பாது காக்கவேண்டும். ஆசிய அபி விருத்தி வங்கி வழங்கிய 100 மில்லியன் டொலர் நிவாரணம் உள்ளிட்ட சலுகைக் கடன்களைப் பெறு வதில் உள்ள நடை முறைச் சிக்கல்களை நீக்கி, அனைத்துத் தொழில்முனை வோருக்கும் வாய்ப்பு வழங்கப் படவேண்டும் என்று அவர் தெரி வித்துள்ளார். (ச-இ)

# சுயதொழிலாளர்களின் விற்பனைக் கண்காட்சி

யாழ்ப்பாணம் பெண்கள் அபிவிருத்தி மையத்தின், சுயதொழில் முயற்சியாளர் களின் உற்பத்திகளைச் சந்தைப்படுத் தும் விசேட கண்காட்சி, யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி வளாகத்தில் கடந்த வாரம் நடைபெற்றது.

யாழ்.மாநகர முதல்வர் வி.மதிவதனி பிர தம விருந்திரன ராகக் கலந்துகொண்டு, காட்சிப்படுத்தப்பட்டிருந்த விற் பனைக் கூடங்களைப் பார்வையிட்டதுடன், அவர் களின் உற்பத்தி முயற்சிகள், தற்போ தைய நிலைமைகள் தொடர்பிலும் கேட்ட றிந்தார். உள்ளூர் உற்பத்தி முயற்சியா ளர்களை மேலும் ஊக்குவிக்கவேண் டும். யாழ்.பெண்கள் அபிவிருத்தி மையம் இது போன்று மேலும் பலருக்கு இவ்வாறான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மாநகரசபை அதற் கான ஒத்துழைப்புகளை வழங்கும் என்று முதல்வர் உறுதியளித்தார். நிகழ் வில் மாநகரசபை உறுப்பினர்களான என்.எம்.அப்துல்லாஹ், ஆர்.எளப். றிஸ்லா மற்றும் யாழ்.பெண்கள் அபிவி ருத்தி மையத்தின் தலைவி என்.சியானா, அமைப்பின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க)

**வாடகைக்கு உணவகம்**

யாழ். நகரில் இயங்கிக்கொண்டிருக்கும் அசைவ உணவகம் வாடகை உடன்படிக்கையின் கீழ் வழங்கப்படும்.

Indian, Chinese அசைவ உணவு வகைகளை தயாரித்து வழங்கக் கூடிய வாடகை உரிமையாள ருக்கு சகல புதிய தளபாடங்களுடன் (சமைய லறை உபகரணங்கள் உட்பட) 15.02.2026 இனுள் முன்னுரிமை வழங்கப்படும்.

வார, வார இறுதி நாட்களில் மாலை 5PM மணிக்கு பிறபாடு உணவகத்தினை பார்வையிட முடியும்.

தொடர்புகளுக்கு: 0742349 120

(CS31169)A

**மணமகள் தேவை**

யாழ். இந்து (V), 1991, சித்திரை நட்சத்திரம், 4ம் பாதம், துபாயில் மெக்கானிக் வேலை பார்க்கும் மணமகனுக்கு பொருத்தமான மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு:-
075 768 7180

(CS30671)-J-1

# ஆசிரியர் ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பம்

கொழும்பு, பெப்.7

நாடளாவிய ரீதியில் உள்ள தேசிய மற்றும் மாகாண பாடசா லைகளில் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப்பரீட்சை விண்ணப்பங் கள் கோரப்பட் டுள்ளன. நாட்டிலுள்ள தேசிய மற்றும் மாகாணப் பள்ளிகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலமொழி மூல ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தகுதியான ஆண் மற்றும் பெண் வேட்பாளர்களிடமிருந்து விண்ணப்பங் கள் கோரப்பட்டுள் ளன. (எ-இ)

# சர்வதேச அரங்கில் சாதித்துவரும் இலங்கையின் ஒளிப்படக்கலைஞர்

கொழும்பு, பெப். 7

16 வயது இளம் ஒளிப்படக் கலைஞரான கொழும் பைச் சேர்ந்த ஜெய்ரின் அன்ரன் 2026ஆம் ஆண்டுக்கான சோனி வேர்ல்ட் போட்டோகிராபி விருதுகள் போட்டியின் இறுதிச்சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளார்.



உலகம் முழுவதும் 200க்கும் மேற்பட்ட நாடு களிலிருந்து சமர்ப்பிக்கப் பட்ட 4 இலட்சத்து 30 ஆயிரத்துக்கும் அதிக மான படைப்புகளில் ஜெய்ரினின் படைப்பும் இடம்பெற்றுள்ளது. இதை யடுத்து, இந்தப் போட்டி யில் முதல் 10 இடங்களுக் குள் தெரிவாகிய முதல் இலங்கையர் என்ற பெரு மையை அவர் பெற்றுள் ளார்.

ஜெய்ரின் அன்ரன் சமர்ப் பித்த 'கீப் இட் கிளீன்' என்ற தலைப்பிலான ஒளிப்ப டம், தனது தோகையை நேர்த்தியாகச் சீர்செய்யும் ஒரு கம்பீரமான மயிலின் அழகிய தருணத்தை உயி ரோட்டமாக பதிவு செய் துள்ளது. (ம)

**மரண அறிவித்தல்**

**தேவராசா பவானி**



சண்டிலிப்பாய் வடக்கு (மண்டுமண்டை) பிறப்பிடமாகவும், கீரிமலை வீதி சண்டிலிப் பாயை வதிவிடமாகவும் கொண்ட தேவ ராசா பவானி நேற்று 06.02.2026 அன்று (வெள்ளிக்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - கண்ணம்மா ஆகியோரின் பாசமிகு மக ளும் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - சின்னம்மா ஆகியோரின் பாசமிகு மரு மகளும் காலஞ்சென்ற தேவராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வாம தேவன், பத்மலிங்கம் மற்றும் பரமசாமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ் சென்ற ராஜ்பவான் மற்றும் ரஜனி (லண் டன்), ராஜ்மதன் (ஜேர்மனி), ராஜ்மோகன் (காங்கேசன்துறை வைத்திய நிலையம் - வட்டுக் கோட்டை), ரமணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், நந்தகுமார் (லண்டன்), கரோலின், தர்ஜினி, சுதர்சன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நர்த்தனா (லண்டன்), சாரங்கன் (லண்டன்), துவாரனா (லண்டன்), புவியழகி, புவித்தேவி, மாதுசன், அக்ஷயா, சாதனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் காளி கோயிலடி, கீரிமலை வீதி, சண்டிலிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இறுதிக் கிரியைகள் நாளை (08.02.2026) ஞாயிறு மதியம் 12.00 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
மோகன் (மகன்) - 077 151 7921

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 31161) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேகம்

யாழ்., பெப்.7 வட்டுக் கோட்டை உடுக்கியவளை ஸ்ரீமகா கணபதி பிள்ளையார் திருக்கோவிலில் கும்பாபிஷேகம் மற்றும் 1008 சங்காபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

யாகபூசை, சங்குபூசை வழிபாடுகள் இடம்பெற்று விசேட ஆராதனைகளைத் தொடர்ந்து பஞ்சமுக விநாயகருக்குத் திருவூஞ்சல் பாஇசைக்கப்படும். பின்னர் சுவாமி வீதியுலா வந்து அருட்காட்சியளிப்பார் என ஆலய தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (ச)


## மணமகள் தேவை

இந்து (V). 1986. கொழும்பில் பிறந்த. அனுச நட்சத்திரம் United Kingdom வசிக்கும் மணமகனுக்கு பொருத்தமான மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு:-
077 988 9910, 077 161 4999, 011 298 0952

(CS/60678) J-1

## மாப்பிள்ளை தேவை

1. கொழும்பு, இந்து, விஸ்வகுலம், 1986, பரணி, BSc, கனடா Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (55378)
2. அனலைதீவு, இந்து, 2000ம் ஆண்டு பிறந்த, கேட்டை, O/L, விஸ்வகுலப் பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54407)
3. பருத்தித்துறை, இந்து, கௌரவகுலம் (K), 1991, பூரட்டாதி, BA, Government officer பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (56513)
4. கரணவாய், இந்து, கெரவகுலம், (K), 1985, மூலம், MSc Information System Engineering, UK citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(21673)
5. பருத்தித்துறை, இந்து, குருகுலம், 1997, உத்திரட்டாதி, BSc (Hons) Government officer பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (57382)
6. Jaffna Town, Roman catholic, குருகுலம், 1990, சதயம், MSc, Scientist, UK citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (30447)
7. சுண்டிக்குளி, Roman Catholic, கௌரவகுலம் (V), 1995, Bachelor of Software Engineering, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (57265)
8. சண்டிலிப்பாய், இந்து, கௌரவகுலம் (V), 1987, உத்திரட்டாதி, Business Management (UK), UK citizen Divorce பெண்ணி ற்கு மாப்பிள்ளை தேவை.(57038)
9. அளவெட்டி, இந்து, கௌரவகுலம் (V), 1996, உத்தரம், BSc, MSc, UK citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (30340)
10. திருநெல்வேலி, இந்து, கௌரவகுலம் (V), 1996, திருவோணம், MSc, Norway + UK citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (30056)

நீங்களாகவே எமது **www.thaalee.com** என்கின்ற **website** இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களை தெரிவு செய்து கொள்ளலாம். Unmarried, Divorce என்பன உண்டு.

(CS 31166) A

S.Sharma J.P
077 189 0367
077 5393 728


## மரண அறிவித்தல்



தோற்றம்
12 . 08 . 1940

மறைவு
06 . 02 . 2026

### கனகசபை இந்திரலிங்கம் (குஞ்சையா)

இருபாலையை பிறப்பிடமாகவும், கோப்பாய் மத்தி, கிருஷ்ணர் கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட கனகசபை இந்திரலிங்கம் அவர்கள் நேற்று (06.02.2026) வெள்ளிக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - முத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தங்கம்மாவின் பெறாமகனும், லட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், செல்வேந்திரன் (சுவிஸ்), தயாவதி, கலாநிதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலாயோகராணி (சுவிஸ்), ஞானேஸ்வரன், கணேஸ்மூர்த்தி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், விஷ்ணு, கஜன், சிந்து, ஆதவன், அபிராம், பிரவீந், சாருஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (08.02.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைப்பெற்று பூதவுடல், தகனக்கிரிகைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும்
ஏற்றுக்கொள்ளுமாறுக் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
கிருஷ்ணர் கோவிலடி, கோப்பாய் மத்தி.
021 449 3585, 077 281 9347

(CS/60675) J-1

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
09 . 12 . 1960

மறைவு
11 . 02 . 2023

அமரர்
### சுப்பிரமணியம் மகேந்திரராஜா
(படையப்பா சிவன் ரவல்ஸ் உரிமையாளர்)


மூன்றாண்டும் ஆனது எங்கள் ஆருயிர் தந்தையே
இழந்து மூன்று ஆண்டுகள் ஆகியும்
எங்கள் மனதில் இன்றும் என்றும்
வாழும் எங்கள் அப்பாவே உங்களை
பிரிந்த இந்த மூன்று வருடங்கள் எங்களுக்கு
மூன்று யுகமாக தெரிகிறது உங்களின்
அரவணைப்பும், கடின உழைப்பும், அறிவுரைகளும்
இன்றும் எங்களை வழிநடத்துகின்றன
உங்கள் நினைவு என்றும் எங்களை
விட்டு அழியாது அப்பா ........

தொட்டிலடி,
சங்கானை.

குடும்பத்தினர்.

(CS 31159) A

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
09 . 12 . 1944

இறப்பு
07 . 02 . 2020

### அமரர் கதிர்காமக்குருக்கள் மாணிக்கவாசகர்

அப்பா ஞ நீங்கள் எம்மை விட்டுப்
பிரிந்து ஆண்டுகள் ஆறு
கடந்தாலும் உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டு அகலாது.

[illegible] கிழக்கு,
கரவெட்டி.

(CS/47034) J-1

பாசமுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரி-20 உலகக்கிண்ணம் ஆரம்பமாகிறது இன்று

இலங்கை, இந்தியா நாடுகள் இணைந்து நடத்தும் ரி-20 உலகக்கிண்ணத் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது.
இன்றையதினம் மூன்று ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. நண்பகல் 11 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் நெதர்லாந்து பாகிஸ்தான் அணிகளும், மாலை 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஸ்கொட்லாந்து மேற்கிந்தியத் தீவுகள் அணிகளும், இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இந்தியா அமெரிக்கா அணிகளும் மோதவுள்ளன. (ம)

## யாழ்ப்பாணம்...

2011ஆம் ஆண்டு மனித உரிமைகள் தினமான டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டிருந்த லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் காணாமல் ஆக்கப்பட்டனர். இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டு, மல்லாகம் நீதிமன்றத்தில் 2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12ஆம் திகதி அறிக்கையிடப்பட்டது.
அத்துடன், லலித் மற்றும் குகன் ஆகியோரின் உறவினர்களால் 2012ஆம் ஆண்டு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுவும் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுமீதான விசாணையின்போது, இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.
இதனையடுத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் விசாரணைகள் ஆரம்பமாகின. கடந்த 2017ஆம் ஆண்டு மனுவின் சாட்சியாளர்கள் பட்டியலில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவின் பெயரும் இணைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணைகளின்போது, கோத்தாபய ராஜபக்ச மன்றில் தோன்றி சாட்சியமளிக்குமாறு உத்தரவிடப்பட்டது. எனினும், பாதுகாப்புக் காரணங்களுக்காக தன்னால் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து சாட்சியம் வழங்க முடியாது என்று கோத்தாபய ராஜபக்ச மறுத்து வந்தார்.
கடந்த டிசெம்பர் மாதம் இந்த வழக்கு விசாரிக்கப்பட்டபோது, யாழ்ப்பாணத்துக்கு வரமுடியாதெனில் அது தொடர்பில் சத்தியக் கடதாசியை வழங்குமாறு கோத்தாபய ராஜபக்ச தரப்புக்கு நீதிமன்றம் அறிவுறுத்தல் வழங்கியது. இதற்கு அமையவே, யாழ்ப்பாணத்தில் தனக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளதாகவும், ஆதலால் நிகழ்நிலையில் சாட்சியம் வழங்க அனுமதிக்க வேண்டும் என்றும் கோத்தாபய சத்தியக் கடதாசியை தாக்கல் செய்துள்ளார்.
எனினும், எத்தகைய அச்சுறுத்தல் தனக்கு உள்ளது என்று கோத்தாபய தெளிவாகக் குறிப்பிடவில்லை என்று லலித், குகன் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினார்கள். இதையடுத்து, இது தொடர்பான விடயங்களை எழுத்துமூல சமர்ப்பணமாக மார்ச் மாதம் 6ஆம் திகதி முன்வைக்குமாறு நீதிமன்றம் இரு தரப்புக்கும் அறிவுறுத்தியதுடன், அன்றைய தினத்துக்கு வழக்கை ஒத்திவைத்தது.
லலித், குகன் தரப்பினரின் சார்பில் சட்டத்தரணிகள் எஸ்.கே.புரந்திரன், நிவிகார பின்னதுவ ஆகியோர் முன்னிலையாகினார்கள். கோத்தாபயவின் தரப்பில் சட்டத்தரணி சுரங்க பெரேரா முன்னிலையானார். (அ-ம-26)

## நீதிமன்றத்தை...

மகன் லலித்குமாரும், குகனும் கடத்திக் காணாமல் ஆக்கப்பட்டனர். கிட்டத்தட்ட 14 ஆண்டுகள் நிறைவடைந்த போதிலும் இதுவரை எமக்கான நீதி வழங்கப்படவில்லை. யாழ்ப்பாணத்துக்குச் சென்று சாட்சியம் வழங்குமாறு கோத்தாபய ராஜபக்சவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. ஆனால், அவர் பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளதாகக் கூறி, விசாரணையைத் தவிர்த்து வருகின்றார். யாழ்ப்பாணத்தில் தனக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளதாக கோத்தாபய கூறுவது நீதிமன்றத்தை ஏமாற்றும் செயற்பாடு என்பதை நாங்கள் திட்டவட்டமாக வலியுறுத்துகின்றோம். சாமானியர்களான எங்களுக்கு நீதி கிடைப்பதற்கு நீதித்துறைதான் வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (அ-ம-26)

## மோ.சைக்கிள்...

வாரிக்குட்டியூர் பகுதியைச் சேர்ந்த சிவகுமார் கரிஷ்னன் (வயது-16) என்ற மாணவனே உயிரிழந்துள்ளான். விபத்துக்கு உள்ளான மோட்டார்சைக்கிளில் இரு மாணவர்கள் பயணித்த நிலையில், மற்றைய மாணவர் வவுனியா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பூவரசன்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-110)

## தொழிற்சங்கப்...

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊழியர் சங்கம் தீர்மானித்துள்ளது.
இது தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தால் நேற்று விடுக்கப்பட்ட ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
2025ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதி துணைவேந்தருடனும், நிர்வாக அதிகாரிகளுடனும் எமது பிரச்சினைகள் தொடர்பில் சுட்டிக்காட்டியிருந்தோம். இதன்போது, எமது கோரிக்கைகள் தொடர்பில் சாதகமான பதில்கள் வழங்கப்பட்டன. அவற்றை ஜனவரி மாதத்துக்குள் நிறைவேற்றுவதாக வாக்குறுதி வழங்கப்பட்டது. ஆயினும் இதுவரை எமக்கான தீர்வுகள் வழங்கப்படவில்லை.
இதையடுத்து, பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி கவனயீர்ப்புப் போராட்டமொன்றை மேற்கொண்டதுடன், எமது கோரிக்கைகளை மீள வலியுறுத்தியுள்ளோம். நாளைமறுதினம் 9ஆம் திகதிக்கு முன்னர் எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். இல்லையேல், எதிர்வரும் 10ஆம் திகதியில் இருந்து நாங்கள் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்போம். அத்துடன், பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவுக்கான ஏற்பாடுகளில் இருந்தும் விலகுவோம் - என்றுள்ளது. (அ-ம-26)

## கவிழ்ந்தது...

பிரிவுக்கு உட்பட்ட வெள்ளாங்குளம் பகுதியில், உழவியந்திரமொன்று கவிழ்ந்து விபத்து உள்ளானதில் 12 பேர் படுகாயமடைந்துள்ளனர்.
இலுப்பைக்கடவையில் இருந்து ஏ32 வீதி வழியாக வெள்ளங்குளம் நோக்கி பயணித்த உழவியந்திரமே திடீரென தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.
இதன்போது, உழவியந்திரப் பெட்டியில் இருந்து பயணித்த 12 பேர் படுகாயமடைந்த நிலையில், அவர்களில் 5 பேர் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையிலும், 7 பேர் முழங்காவில் ஆதார மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-6)

## ஆயுதங்களுடன்...

மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே மேற்படி இருவரும் கூரிய ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-66)

## நாள்...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் சர்வதேச மருத்துவ சுகாதார அமைப்பு, உயர் கல்வி அமைச்சு ஆகியவற்றின் முயற்சியிலும், புலம்பெயர் அமைப்புக்களின் நிதிப் பங்களிப்போடும் ஒன்றிணைந்த வகையில் இந்த சத்திரசிகிச்சை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த சிகிச்சைப் பிரிவு, சிறிய சத்திர சிகிச்சைகளுக்கு நீண்ட நாள்களாகக் காத்திருக்கும் நோயாளர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமையும். அத்துடன் இது, சிறு சத்திர சிகிச்சைகளுக்கான அதீத செலவைக் குறைக்கும் உபாயமாகவும் பார்க்கப்படுகிறது.
இந்த ஆரம்ப விழாவில் கலாநிதி காருண்யன் அருளானந்தம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் இ. சுரேந்திரகுமாரன், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி சத்தியமூர்த்தி, உயர்கல்வி அமைச்சின் அதிகாரிகள், யாழ். மருத்துவ பீட பேராசிரியர்கள் மருத்துவநிபுணர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-26)

## சீர்கேடான...

குறைபாடுகளுடன் செயற்பட்ட ஆறு உணவகங்கள் அவதானிக்கப்பட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. நீதிமன்ற கட்டளைக்கு அமைய, திருத்தல் பணிகளுக்காக அந்த உணவகங்கள் தற்காலிகமாக சீல் வைத்து மூடப்பட்டன. (அ-ம-110)

## காணாமல்...

என்பன இணைந்து யாழ்ப்பாணத்தில் நேற்றுப் போராட்டத்தை முன்னெடுத்தன.
யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2 மணிமுதல் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.
குறித்த ஆர்ப்பாட்டத்தில் லலித்குமாரின் தந்தை வீரராஜ், மூத்த பொதுவுடைமைவாதி சி.கா.செந்திவேல், மூத்த எழுத்தாளர் க.தணிகாசலம், தந்தை செல்வாவின் பேரன் ச.இளங்கோவன், சம உரிமை இயக்கத்தின் பிரதிநிதிகள், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் பிரதிநிதிகள், சிவில் பிரதிநிதிகள், மக்கள் போராட்ட இயக்கத்தின் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-ம-66-26)

## விடுதலைப்...

தடையை நீக்க வேண்டும் என்று வலியுறுத்தி மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைவர் வைகோ வழக்குத்தொடர்ந்திருந்தார். சென்னை உயர் நீதிமன்றத்தில் கடந்த 2013ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு, 13 வருடங்களாக விசாரிக்கப்படாமல் இருந்து வருகின்றது.
இவ்வாறான நிலையிலேயே, தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குமாறு கோரிய மனு மீதான விசாரணையை சென்னை உயர் நீதிமன்றம் மீண்டும் பிற்போட்டுள்ளது. எதிர்வரும் 16ஆம் திகதி இந்த வழக்கு பரிசீலனைக்கு எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், அன்றைய தினமும் விசாரணைகள் இடம்பெறாது என்றே சட்ட வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
இந்திய மத்திய அரசாங்கம் கடந்த 1991ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பை தடைப் பட்டியலில் சேர்த்தது. அன்றுமுதல் இன்றுவரை புலிகள் மீதான தடை நீடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் கடத்தல்; 3 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, பெப். 7
இரண்டு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய 'குஷ்' ரக போதைப்பொருளை கடத்திய குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன், இந்தக் கடத்தலுக்கு உடந்தையாகச் செயற்பட்ட மேலும் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கட்டுநாயக்கவில் கைது செய்யப்பட்ட நபரிடம் மேற்கொண்ட விசாரணையின் போது, குறித்த போதைப் பொருள்களை மன்னாருக்குக் கொண்டுசெல்லவுள்ளதாகவும், இதற்காக இருவர் நீர்கொழும்பில் காத்திருக்கின்றனர் என்றும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். இதையடுத்தே, மற்றைய சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.
இதையடுத்து மூன்று சந்தேகநபர்களையும் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-இ)

## 'கலைஞனின் குரல்' பத்திரிகை வெளியீடு

முத்தமிழ் கலைஞர் மேம்பாட்டு மன்றத்தில் 'கலைஞனின் குரல்' மாதாந்த பத்திரிகையின் இதழ் 7 வெளியீடு யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் வவுனியா பல்கலைக்கழக வேந்தர் கலாநிதி சுப்பிரமணியம் மோகனதாஸ் பங்கேற்கவுள்ளார். (ச)


## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் அமைந்துள்ள புடைவையகத்திற்கு வேலை தெரிந்த, பழக விரும்பும் ஆண்/பெண் வேலையாள் தேவை.
(சுன்னாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 076632 3554
(CS 31163) A

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள பிரபல புத்தகசாலைக்கு வேலையாட்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும். வயது பிரச்சனை இல்லை, அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை.
மற்றவை நேரில்
தொடர்புகளுக்கு:-
077 964 7256
(CR/47327) J-1

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல்யமான நிறுவனத்திற்கு பின்வரும் வேலைக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.
- ரொட்டி போடுபவர் - 5 பேர்
- சமையல் வேலை தெரிந்தவர் - 5 பேர்
- துப்பரவு பணியாளர் - 2 பேர்
- விற்பனையாளர்கள் - 5 பேர்

கவர்ச்சிகரமான சம்பளம், விரும்பியவர்களுக்கு தங்குமிடம், உணவு தரப்படும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு:- 076 148 7678
(CS/50664) J-1


## மரண அறிவித்தல்



தோற்றம் 01 - 08 - 1942
மறைவு 04 - 02 - 2026

### அம்பிகாபதி பாலசுப்பிரமணியம்

ஆவரங்காலை பிறப்பிடமாகவும் கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட அம்பிகாபதி பாலசுப்ரமணியம் அவர்கள் கடந்த (04.02.2026) புதன்கிழமை காலமானார் .

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், பாலசுப்ரமணியம் (ஓய்வுபெற்ற கொக்குவில் இந்துக்கல்லூரியின் கணித ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், ஜெயலட்சுமி (அமெரிக்கா) ஜெயநந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கணேசராஜா (அமெரிக்கா), யோகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சஹானா (அமெரிக்கா), ஆகாஷன் (அமெரிக்கா) திவ்வியா (லண்டன்) ஆகியோரின் அன்பு பேத்தியும், அரியரட்ணம் (கனடா), அருளம்பலம் (கனடா), அருந்தவதேவி (கனடா), தனலட்சுமி , ஆனந்தராஜா ஆகியோரின் அன்பு சகோதரியும், கௌசல்யாதேவி (கனடா), காலம்சென்ற ராஜேஸ்வரி, காலம்சென்ற திருநாவுக்கரசு (கனடா) காலம்சென்ற அருளானந்தம், பாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (08.02.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு பிரம்படி ஒழுங்கை கொக்குவிலில் நடைபெற்று முற்பகல் 09.00 மணியளவில் பூதவுடல் தகனகிரிகைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS/31152) J-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
### கணபதிப்பிள்ளை இராசபூபதி

தோற்றம் 20.12.1949
மறைவு 19.01.2025

திதி : தேய்பிறை சஷ்டி

ஆலம் விழுதுகள் போல்
ஆயிரம் உறவு கொண்டு
குடும்ப உறவுகள் வீழ்ந்துவிடாதிருக்க
வேர் என இருந்தீர்களே அம்மா!
மாயப் புயல் வடிவில்
காலனவன் இன்னுயிர் பறிக்க
சோகத்தை தந்துவிட்டு
சொல்லாமல் சென்றதென்ன?
நல்வழிகள் காட்டி எமக்கு
ஒளி கொடுத்த தீபமே அம்மா
நாம் மண்ணில் வாழும் வரை
அழியாது உங்கள் நினைவு...

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
என்றென்றும் உங்கள் நினைவுடன்..
குடும்பத்தினர்.

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

(CS 31162) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.